உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# நற்றிணையில் வரலாற்றுச் செய்திகள்

சு.ரமேஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர், அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்.

## முன்னுரை

சங்க காலத்தில் இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றப்பட்டவர்கள் அரசர்கள். நிலையான புகழைப் பெற்றவனாக மன்னன் விளங்கினான். அரசில் உயர்ந்த நிலையை எட்டியவனை வேந்தன் என்றும், குறுநில மன்னர்கள்மீது ஆதிக்கம் உடையவனை கொற்றவன் என்றும் அழைத்தனர்.

சேர, சோழ, பாண்டியர்கள் மட்டுமே வேந்தர்கள் என அழைக்கப்பட்டனர். வேந்தர்களின் பாதுகாப்பில் ஆட்சியை நடத்துபவர்களை குறுநில மன்னர்கள் என்றும் அழைத்தனர். சங்க காலத்தில் இவர்களின் ஆதிக்கம் அதிகமாகவே இருந்ததாக நம் இலக்கியங்கள் காட்டுகின்றன.

கடையேழு வள்ளல்கள், குறுநில மன்னர்கள் மற்றும் சேர, சோழ வேந்தர்களின் குடிப்பெருமை, ஆட்சித்திறன், கொடை, புலமை போன்ற பல்வேறு வகையான சிறப்புக்களை வரலாற்றுச் செய்திகளாக நற்றிணை மூலம் புலவர்கள் சமூகத்துக்கு தந்துள்ளனர். அவற்றினைப் பற்றிய செய்திகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பழையன் என்னும் படைத்தலைவனின் பெருமை

பழையன் என்பவன் சோழர்களுக்குப் படைத்தலைவனாக விளங்கிய குறுநில மன்னன். வீரம் படைத்தவன். சோழ மன்னர்கள் கொங்கரை அடக்குவதற்காக 'போ ஓர்' என்ற ஊரின் தலைவனான இந்த பழையனிடம் வேற்படையை பெற்று வைத்திருந்தனர் என்பதன் மூலம் பழையனின் வீர வரலாறு நமக்கு தெரியவருகிறது. இதனை,

**"கொற்றச் சோழர் கொங்குர்ப் பணீ இயர்,**
**வெண் கோட்டு யானைப் போஓர் கிழவோன்**
**பழையன் வேல் வாய்த்தன்ன" - (நற்10:6-8)**

"மாரி அம்பின் மழைத்தோல் பழையன்,
காவிரி வைப்பிற் போஓர்" (அகம்186:15-16)

என்பதன் மூலமும் பழையனின் வரலாற்றினை அறிய முடிகிறது.

### அழிசி என்ற குறுநில மன்னன்

மழை போன்ற வள்ளல் தன்மையும், கள்ளுணவையும் தேமல் படர்ந்த வேற்படையையும் உடைய சேந்தன் தந்தையாகிய அழிசி தேன்மணம் கமழும் பூ விரிந்த மாலையையுடைய அழகிய தேரினை உடையவன். அவ்வழிசியின் ஆளுகைக்கு உட்பட்ட நெல் வயல்களில் நெற்கதிர்களுக்கிடையே வண்டுகள் மொய்க்க, மலரும் நெய்தல் பூக்களுடையது. தேன் வடியும் வயல் சூழ்ந்த 'ஆர்க்காடு' என்னும் ஊரில் உள்ள கழனி பகைவரால் அணுகுவது அரியது. என்பதன் மூலம் அழிசியின் பெருமையும் நாட்டு வளமும் கூறப்பட்டுள்ளது. இதனை,

"ஆர் அரண் கடந்த மாரி வண் மகிழ்த்
திதலை எஃகின் சேந்தன் தந்தை
தேம் கமழ விரி தார் இயல் தேர் அழிசி,
வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியல்; அம் கழனி ஆர்க்காடு அன்ன" (நற்:190-2-6)

என்னும் பாடலின் மூலம் அறியலாம்.

### வல்வில்ஓரி காட்டின் கொடைத்தன்மை

வல்வில் ஓரியின் காடுகளில் 'குமிழமரம்' என்ற மரம் காணப்படும். அந்த மரத்தில் இருந்து வளைந்த மூக்கையுடைய முற்றிய கனிகள் கீழே உதிர்ந்து, அங்கு துள்ளிக் குதித்து விளையாடுகின்ற, அழகிய இளம் மான்களுக்கு வெறுப்பில்லாத உணவாக விளங்கும் கொடைத்தன்மை உடையது என்று பரணர் கூறுவதன் மூலம் வல்வில் ஓரியின் காடுகளும், அவனைப் போல கொடைத்தன்மையோடு விளங்கிற்று என்ற நிலை நமக்கு தெரிய வருகிறது.

"அத்தக் குமிழின் கொடு மூக்கு விளை கனி
எறி மட மாற்கு வல்சி ஆகும்
வல் வில் ஓரிகானம் நாறி" (நற் 6:7-10)

என்னும் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

### உறையூரை ஆண்ட தித்தன் பெருமைகள்

உறையூரை ஆட்சி செய்த வீரை வேண்மான் வெளியன் எனப்பெயர் கொண்ட தித்தன் என்றவனின் முரசும், வெள்ளிய சங்குகளும், ஓசையிட்டு மாலைப்பொழுதை விளக்குகளுடன் சென்று எதிர் கொள்ளும் என்பதை,

“வீரை வேண்மான் வெளியன் தித்தன்முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின்வெண் கோடு இயம்ப, நுண் பனி அரும்ப” (நற் 58:5-7)

என்ற நற்றிணை பாடலால் அறிய முடிகிறது. மேலும் “மாவண் தித்தன் வெண்ணெல் வேலி உறந்தையன்ன” (புறம்352.9-10) என்றும், ‘பெறலரும் தித்தன் செல்லா நல்லிசை உறந்தை’ (புறம்.395.18-19) என்றும் புறநானூறு கூறுவதால் இவன் உறையூரை ஆண்ட சோழ மன்னன் என்பது பெறப்படும். மேலும் இவன் பெயர் ‘வீரை வேண்மான் வெளியன் தித்தன்’ என்று விளக்கமுற அறியப்பெறுதல் நற்றிணையின் இப்பாடலில்தான்.

சேரன் கணைக்கால் இரும்பொறை மூவன் என்பவனை போரில் வென்றான். மூவனின் வலிமையான பற்களை பிடுங்கி வந்து, தன் வாயிற் கதவில் வைத்து இழைத்தான். அப்படிப்பட்ட வாயிலையும், கடற்கரைச் சோலையையும் உடைய தொண்டி நகரின் தலைவனும், வெல்லும் வேற்படையை உடையவனும், பகைவரால் வெல்ல முடியாத சேனையையும் உடையவன். கணைக்கால் இரும்பொறை அவனுடைய பாசறையில் ஒற்றை தந்தம் உடைய யானை ஒன்று மதம் கொண்டு வீரர்களை துயிலவிடாது அங்கும் இங்கும் அலைந்தது. அதனால் வீரர்கள் துயிலாது நெஞ்சு நடுங்கித் துடித்தனர். பின்பு மதம் அடக்கி யானையால் துன்பம் இல்லாது வீரர்கள் யாவரும் அலை ஓய்ந்த கடல் போல கண் உறங்கினர் என்ற வரலாற்றுச் செய்தியை பொய்கையார் கீழ் வரும் பாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

“தெறல் அருந் தானைப் பொறையன், பாசறை
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரை தபு கடலின் இனிது கண் படுப்ப,
கடாஅம் கழீஇய கதன் அடங்கு யானைத்” (நற் 18:5-8)

## கிள்ளி வளவனின் அம்பர் நகரப் பெருமை

போரிலே கொல்லப்பட்டு வீழும் பிணங்களின்மீது பருந்து விழுமாறு, பகைவரின் தேர்ப்படையோடு போர் செய்பவனும், பலவாகிய சருச்சரை அமைந்த பெரிய துதிக்கைகளை உடையதாக, ஏந்திய தந்தங்களை கொண்ட யானைகளை உடையவன் கிள்ளி வளவன்.

அவனுடைய ‘அம்பர்’ நகரம் புதியதாய்; அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த கொடிகளுடன் விளங்கும். அந்நகரைச் சூழ்ந்த அரசலாற்று தெளிந்த கருமணல் போன்றது

தலைவியின் கூந்தல், என்பதன் மூலம் கிள்ளி வளவனின் அம்பர் நகரப் பெருமையை நாம் காணலாம்.

இதனை,

**"அருஞ் சுரம் எளியமன், நினக்கே; பருந்து பட**
**பாண்டிலொடு பொருத பல் பிணர்த் தடக் கை**
**ஏந்து கோட்டு யானை இசை வெங் கிள்ளி**
**வம்பு அணி உயர் கொடி அம்பர் சூழ்ந்த**
**அரிசில் அம் தண் அறல் அன்ன, இவள்**
**விரி ஒலி கூந்தல் விட்டு அமைகலனே" (நற் 141:7-12)**

என்ற நற்றிணை பாடல் மூலம் சல்லியங்குமரனார் விளக்கியுள்ளார். மேலும் அம்பர் நகரச் சிறப்பினை, அம்பர் சோணாட்டூர் "காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை நெல்விளை கழனி அம்பர்" என (புற 385:8-9) குறிப்பிடுகின்றது.

### ஆஅய் அண்டிரனின் பெரும் மகிழ்ச்சி

கடையேழு வள்ளல்களில் ஒருவனான ஆஅய் அண்டிரனின் நெய்தல் நிலத்து புன்னை மரத்தில், வெண்மை நிறமுடைய நாரைகள் தங்கிற்று. அந்நாரைகள் எழுப்பிய ஒலியானது பெரும் மகிழ்ச்சியோடு தன் அவையில் பரிசினைப் பெற்ற இரவலரின் அழகிய தேரினது ஒலிபோல கேட்கும் என்பதனை,

**"விருந்தின் வெண் குருகு ஆர்ப்பின்,**
**வண் மகிழ் நாளவைப் பாரிசில் பெற்ற**
**பண் அமை நெடுந் தேர்ப் பாணியின், ஒலிக்கும்" (நற் 167:2-4)**

என்ற பாடலின் மூலமாக ஆஅய் அண்டிரனின் பெரும் மகிழ்ச்சியானது இரவலர்களுக்கு ஈவதே என்பதை உணர்த்துகிறது.

### மிஞிலி என்ற குறுநில மன்னனின் ஊர்ப்பெருமைகள்

சிறந்த வீரர்களின் தலைவனான மிஞிலி மன்னன் 'காக்கும் பாரம்'; என்ற ஊரினைப் போல அழகுடையவனவாகவும், ஆத்திமாலையை உடையவனாகவும் சிற்றூர் பலவற்றை ஆளுதற்குரிய சிறுகோல் உடையவனவாகவும் விளங்குவான். அவனுடைய ஆரேறு என்னும் ஊரினைப் போலவும், மழை போன்ற கொடை உடைய ஓரி மலையின் இருக்கும் மயிலின் தோகை போலவும் விளங்கினான் என்பதை,

**"பூந் தோள் யாப்பின் மிஞிலி, காக்கும்**
**பாரத்து அன்ன - ஆர மார்பின்**

சிறு கோற் சென்னி ஆரேற்றன்ன-
மாரி வண் மகிழ் ஓரி கொல்லிக்
கலி மயில் கலாவத்து அன்ன இவள்
ஒலி மென் கூந்தல் நம் வயினானே". (நற் 265:4-9)

என்று கூறுவதன் மூலம் பரணர் மிஞிலியின் ஊர்ப்பெருமையை இப்பாடலின் மூலம் விளக்குகிறார். மேலும் இவர்களின் சிறப்பினை,

"ஒன்னார் ஓம்பரண் கடந்த வீங்கு பெரும்
தானை அடுப்போர் மிஞிலி" (அகம் 181:4.5)

"செல்லா நல்லிசை நிறுத்த வல்வில் ஓரி" (அகம் 209-11)

என்பதன் மூலமாகவும் மிஞிலியின் பெருமைகள் நமக்கு தெரிய வருகிறது.

## கிள்ளி வளவனின் கோவில் வெண்ணி

வாளை மீன்கள் வாள் போல பிறழ அவற்றை உண்ணாது அப்பொய்கையிலேயே நீர் நாய் தங்கித் துயில் கொள்ளும். கொடையில் சிறந்த கிள்ளிவளனின் கோயில் வெண்ணியைச் சூழ்ந்த வயல்களில் வெண்மையான ஆம்பல் விளங்கும் என்று தன் ஆளுகைக்கு உட்பட்ட கோயில் வெண்ணியின் வளமையை புகழ்வதை,

"வாளை வாளின் பிறழ, நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்
கை வண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த
வயல் வெள் ஆம்பல் உருவ நெறித் தழை
ஐது அகல் அல்குல் அணி பெறத் தைஇ"(நற் 390:1-5)

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

நீர் நாயானது வாளை மீன்களை கொள்ளுதலை இயல்பாகக் கொண்டது என்பதை "பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய் வாளை நாளிரை பெறூஉம் ஊர" என்பதிலிருந்து (ஐங்-63:1-2) தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாது கிள்ளிவளவனுடைய கோயில் வெண்ணியில் அவற்றை கொல்லாது நின்றதையும் நற்றிணையில் மேற்கண்ட பாடல் மூலம் ஔவையார் குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

நற்றிணையில் வேந்தர்கள், குறுநில மன்னர்கள் என ஏராளமானோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதியமான் அஞ்சி, காரி, அழிசி, குட்டுவன், ஆய் அண்டிரன், சேந்தன், உதியன், நன்னன், ஓரி, தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் போன்றோர்களும் மற்றும் ஏராளமான அரசர்கள், அவர்களைப் பற்றிய

செய்திகளையும் நற்றிணையின் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். சங்க காலத்தில் வேந்தர்களை அடுத்து குறுநில மன்னர்கள் சிறப்புற்று விளங்கினர் என்பதும் நற்றிணையின் மூலம் காணக்கிடைக்கின்றது.

குறுநில மன்னர்கள் வேந்தர்களின் ஆட்சிக்குட்பட்டும், அரசியலில் பங்கேற்றும், போர்க்காலங்களில் வேந்தர்களுக்கு படைத்தலைவனாகவும் விளங்கினர். இரவலர்களுக்கு உணவு, ஊர், அணிகலன்கள், குதிரைகள், யானைகள், மலைகள் இன்னும் பலவற்றையும் ஈந்து பெரும் வள்ளல்களாக வாழ்ந்தனர். குறுநில மன்னர்களின் ஆட்சியிலும், மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்தனர். நற்றிணையில் காணப்படுகின்ற புலவர்களின் கற்பனைத்திறன் செழுமை உடையதாக விளங்குகிறது.

சிறந்த கலை ரசனை உடையவர்களாகவும் விளங்கினர். அரசர்கள் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளை வளமையாக வைத்தும், மக்களைக் காத்தும் வந்துள்ளனர். மேலும் தன்னுடைய நகரினையும், துறைமுகங்களையும் சிறப்பாக வைத்து பாதுகாத்து இருப்பதும் தெரியவருகிறது. இவ்வாறாக நற்றிணை பாடல்களில் வரலாற்றுச் செய்திகளான மன்னர்களின் குடிப்பிறப்பு, ஆட்சிமுறை, ஆட்சிச் சிறப்பு, வள்ளல் தன்மை, நகரின் சிறப்பு என்று பல செய்திகள் பரவிக் கிடப்பதை நாம் அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்**


1. நற்றிணை மூலமும் உரையும் – உரையாசிரியர் முனைவர் கு.வே.பாலசுப்ரமணியன்
2. நற்றிணை மூலமும் விளக்கவுரையும் - உரையாசிரியர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை



utsmdu2@gmail.com

# உலகத்தமிழ்

உலகத் தமிழ்ச் சங்கம் வழங்கும் மின்னிதழ்


((((((((((((((()))))))))))))))